இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

மோதல்கள், பிரிவினைகள் மற்றும் அமைதிக்காக ஏங்கும் இதயங்களின் சோர்வு ஆகியவற்றால் குறிக்கப்பட்டுள்ள இவ்வுலகில், கிறிஸ்துவின் பிறப்பு நமக்கு ஒரு உறுதியை அளிக்கிறது: அதாவது, நம்பிக்கை என்பது யதார்த்தத்திலிருந்து தப்பி ஓடுவது அல்ல.

# பாலங்களை அமைத்து ஒவ்வொரு இதயத்தையும் வரவேற்கும் நம்பிக்கை



பினாங்கு: 'நம்பிக்கையின் யூபிலி' (Jubilee of Hope) ஆண்டை நாம் நிறைவு செய்யும்போது, கிறிஸ்துமஸ் விழா தனது அமைதியான ஒளியுடன் நம்மை வரவேற்கிறது. இந்த ஒளி கண்களைக் கூசச் செய்வது அல்ல, மாறாக மென்மையாகக் குணமாக்கக்கூடியது. மோதல்கள், பிரிவினைகள் மற்றும் அமைதிக்காக ஏங்கும் இதயங்களின் சோர்வு ஆகியவற்றால் குறிக்கப்பட்டுள்ள இவ்வுலகில், கிறிஸ்துவின் பிறப்பு நமக்கு ஒரு உறுதியை அளிக்கிறது: அதாவது, நம்பிக்கை என்பது யதார்த்தத்திலிருந்து தப்பி ஓடுவது அல்ல. மாறாக, கடவுள் நமது யதார்த்தத்திற்குள் நுழைகிறார், நம்மோடு நடக்கிறார், குறிப்பாக மிகவும் நலிவுற்றவர்களோடு நடக்கிறார், மேலும் நம்மைத் தம் இரக்கத்தின் கருவிகளாக இருக்க அழைக்கிறார்.

பல்வேறு கலாச்சாரங்கள், மொழிகள் மற்றும் பல இனங்களின் விசுவாசப் பாரம்பரியங்களைக் கொண்டுள்ள வளமான பூமியான மலேசியாவில், கிறிஸ்துமஸ் ஒரு ஆழமான அழைப்பை விடுக்கிறது: பிரிவினைகள் மிக எளிதாகப் பெரிதுபடுத்தப்படும் இக்காலத்தில், நாம் பாலங்களை அமைப்பவர்களாக (builders of bridges) மாற வேண்டும். குடிலில் இருக்கும் அந்தக் குழந்தை, அனைவரையும் உள்ளடக்கிய, தாழ்மையான மற்றும் படைப்பாற்றல் மிக்க அன்பை வெளிப்படுத்துகிறது. உண்மையான ஒற்றுமை என்பது ஒரே மாதிரியாக இருப்பதைக் கோருவதில்லை, மாறாக பொறுமையான, துணிச்சலான சந்திப்புகளைக் கோருகிறது. நாம் ஒருவரையொருவர் கிறிஸ்துவின் கண்களால் பார்க்கும்போது, அந்நியர்களைக் காண்பதில்லை; மாறாக, கடவுளின் இரக்கம் என்னும் ஒரே வானத்தின் கீழ் வாழும் அண்டை வீட்டாரையும், வழித்துணைவர்களையும், சகோதர சகோதரிகளையும் காண்கிறோம்.

பாலங்களை அமைக்கும் இந்த நம்பிக்கை, நம் சமூகங்களின் அன்றாட வாழ்வில் உயிருடன் இருப்பதை நான் காண்கிறேன். தங்கள் எளிய ஆசீர்வாதங்களை அண்டை வீட்டாருடன் பகிர்ந்து கொள்ளும் குடும்பங்களில், தங்குவதற்கு இடமில்லாதவர்களுக்குத் தங்கள் கதவுகளைத் திறக்கும் இறைமக்களிடம், பேசுவதற்கு முன் செவிமடுக்கக் கற்றுக்கொள்ளும் இளைஞர்களிடம் நான் இதைக் காண்கிறேன். வேற்றுமைகளை வெறுமனே சகித்துக்கொள்ளாமல், அவற்றை மரியாதையுடன் ஏற்றுக்கொண்டு, ஒருவருக்கொருவர் பண்டிகைகளைக் கொண்டாடும் சமூகங்களை நான் காண்கிறேன். குழந்தைகளுக்கு எழுதவும் படிக்கவும் கற்றுக்கொடுக்கும் தன்னார்வலர்கள், துப்புரவுப் பணிகளை ஏற்பாடு செய்யும் இளைஞர்கள், மற்றும் முதியவர்களுக்கு அன்றாடப் பணிகளில் உதவும் அல்லது மருத்துவமனைக்குச் சென்று சந்திக்கும் அண்டை வீட்டுச் சமூகங்கள் ஆகியோரிடம் நான் இதைக் காண்கிறேன். இந்த அமைதியான சைகைகள் 'ஒன்றியக்கத்தின்' (synodality) இதயத்தை வெளிப்படுத்துகின்றன: அதாவது, இணைந்து கொண்டாடுதல், இணைந்து செவிமடுத்தல் மற்றும் இணைந்து பயணித்தல்.

கிறிஸ்துமஸ் நம்மை விளிம்பு நிலைகளுக்குச் செல்லவும் அழைக்கிறது. பெரும்பாலும் கவனிக்கப்படாத மக்களை நோக்கிச் செல்ல அது அழைக்கிறது: நிலத்தின் பழமையான ஞானத்தைப் பாதுகாக்கும் ஓராங் அஸ்லி (பழங்குடியினர்) சமூகங்கள், வீட்டிலிருந்து வெகு தொலைவில் உழைக்கும் புலம்பெயர்ந்தோர் மற்றும் அந்நியத் தொழிலாளர்கள், பாதுகாப்பிற்கான நம்பிக்கையைத் தவிர வேறெதுவும் இல்லாமல் வந்து சேரும் அகதிகள், கஷ்டங்களைச் சகித்துக்கொள்ளும் முதியவர்கள் மற்றும் தனித்து வாழும் பெற்றோர்கள், வறுமை, நோய் அல்லது சமூகப் புறக்கணிப்பை எதிர்கொள்ளும் உள்ளூர் குடும்பங்கள் ஆகியோரை நோக்கிச் செல்ல அழைக்கிறது. கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து முதன்முதலில் கேள்விப்பட்டவர்கள் இடையர்கள்தான் என்பதை நற்செய்தி நினைவூட்டுகிறது. அவர்கள் சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட சாதாரண மனிதர்கள், ஆனாலும் கடவுளின் மகிமைக்குச் சாட்சியாக இருக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இன்றும், விளிம்பு நிலையில் இருப்பவர்கள் நம்மத்தியில் கிறிஸ்துவின் பிரசன்னத்தைத் தொடர்ந்து வெளிப்படுத்துகிறார்கள்.

தங்கள் மரபுகளைப் பெருமையுடன் கற்கும் ஓராங் அஸ்லி குழந்தைகளின் புன்னகையில், நெருக்கடியான தங்குமிடங்களில் இருக்கும் புலம்பெயர்ந்தோரின் மெல்லிய ஜெபங்களில், தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பும் அகதிகளின் மன உறுதியில், மற்றும் முதியவர்களின் அமைதியான விசுவாசத்தில், மாட்டுக் குடிலின் ஒளி பிரகாசிக்கிறது. நாம் அவர்கள் அருகில் செல்லும்போது, அவர்கள் வெறுமனே தர்மத்தைப் பெறுபவர்கள் மட்டுமல்ல, மாறாக நம்பிக்கை, துணிச்சல் மற்றும் விடாமுயற்சி ஆகியவற்றின் ஆசிரியர்கள் என்பதைக் கண்டறிகிறோம். உணவைப் பகிர்ந்து கொள்வது, கவனமாகச் செவிமடுப்பது, தோழமை வழங்குவது அல்லது ஒருவருக்கு வேலை கிடைக்க உதவுவது போன்ற மிகச்சிறிய சைகைகள் கூட கடவுளின் அரசாட்சியின் கருவிகளாக மாறுகின்றன என்பதை அவர்களின் சாட்சியத்தின் மூலம் நாம் நினைவூட்டப்படுகிறோம்.



"ஒன்றியங்கும் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி இணைந்து பயணித்தல் - நற்செய்தி அறிவிக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்" (Walking Together Towards a Synodal and Prophetic Church – A People for Missionary Discipleship) என்ற நமது தொடர் பயணம், கிறிஸ்துமஸ் காலத்தில் ஆழமான அர்த்தத்தைப் பெறுகிறது. பெத்லகேமில் சிறியவரான கடவுள், நம்மை வெற்றியாளர்களாக (conquerors) அல்ல, மாறாக வழித்துணைவர்களாகவும், நற்செய்தி அறிவிக்கும் சீடர்களாகவும் அனுப்புகிறார். ஆழமாகச் செவிமடுக்கவும், மென்மையாகக் குணமாக்கவும், விசுவாசத்தோடு உடன் பயணிக்கவும் அவர் அனுப்புகிறார். இறைவாக்கு உரைக்கும் ஒரு திருஅவையானது, ஏழைகளுக்குத் துணையாக நிற்கிறது, குரலற்றவர்களுக்காகப் பேசுகிறது, துன்பங்களைக் கண்டு முகத்தைத் திருப்பிக்கொள்ள மறுக்கிறது. அது பிரம்மாண்டமான சைகைகள் மூலம் அல்ல, மாறாக அன்பு மற்றும் சேவையில் அன்றாட விசுவாசத்தின் மூலம் கடவுளின் கனிவைப் பிரதிபலிக்கிறது.

யூபிலி ஆண்டு நிறைவடையும் வேளையில், அதன் அருள் நம்மைத் தொடர்ந்து வழிநடத்துகிறது. நம்பிக்கை என்பது உறுதியான செயல்களில் காணப்பட வேண்டும் என்பதை இந்தப் புனித ஆண்டு நமக்குக் காட்டியுள்ளது: கலாச்சார மற்றும் சமூக எல்லைகளைக் கடப்பது, ஒவ்வொரு நபரும் செவிமடுக்கப்படும் சமூகங்களை வளர்ப்பது, மற்றும் நலிவுற்றவர்கள் மாண்பையும் தங்களுக்குரிய இடத்தையும் உணரும் வழிகளை உருவாக்குவது அவசியம். நம்பிக்கை அறிவிக்கப்படுவது மட்டுமல்ல, வாழ்ந்து காட்டப்படும்போதே அது நம்பகமானதாகிறது!

அமைதி என்பது குடிலில், தாழ்ச்சியில், எளிமையில் மற்றும் ஒருவருக்கொருவர் நெருக்கமாக இருப்பதற்கான விருப்பத்தில் தொடங்குகிறது என்பதை கிறிஸ்மஸ் நினைவூட்டுகிறது. கிறிஸ்துவின் தாழ்ச்சி நம் உறவுகளையும், நம் குடும்பங்களையும், நம் சமுதாயத்தையும் வடிவமைக்க நாம் அனுமதித்தால், நம் சமூகங்கள் நல்லிணக்கம் வேரூன்றும் இடங்களாக மாறும். புதிதாகப் பிறந்த ஆண்டவர், அனைத்து மலேசியர்களிடமும் பரஸ்பர மரியாதை, ஒற்றுமை மற்றும் இரக்கத்திற்கான புதுப்பிக்கப்பட்ட விருப்பத்தை எழுப்புவாராக. மேலும் நமது கிறிஸ்தவச் சமூகங்கள் 'ஒன்றியங்கும்', 'இறைவாக்கு உரைக்கும்' மற்றும் 'நற்செய்தி அறிவிக்கும்' சமூகங்களாக மாறட்டும்: புரிந்துணர்வின் பாலங்களாகவும், வரவேற்பின் இல்லங்களாகவும், ஏமாற்றம் தராத நம்பிக்கையைச் சுமப்பவர்களாகவும் அவை திகழட்டும். ஏனெனில் இந்த நம்பிக்கை, தம் மக்களிடையே குடிகொள்ளத் தேர்ந்தெடுத்த கடவுளிடமிருந்தே ஊற்றெடுக்கிறது.

கத்தோலிக்கர்களையும், அமைதி மற்றும் நல்லெண்ணம் கொண்ட அனைத்து ஆண்களையும் பெண்களையும் நம்பிக்கையின் திருப்பயணிகளாக இருக்க நான் அழைக்கிறேன்.

அனைவருக்கும் ஆசீர்வாதமான கிறிஸ்மஸ் நல்வாழ்த்துகள்.

Sebastian Francis

கர்தினால் செபாஸ்டியன் பிரான்சிஸ்
பினாங்கு ஆயர்

# புனித அசிசி பிரான்சிஸ் தேவாலயத்தில் திருவருகைக் கால ஆன்மீகப் பயிற்சி





கடந்த 6 டிசம்பர் 2025 அன்று தமிழ்ப் பேசும் பங்குமக்கள் திருவருகைக் கால ஆன்மீகப் பயிற்சியில் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் 30-கும் மேற்பட்ட தமிழ் பங்கு மக்கள் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

இந்த முகாமை சிரம்பான் மினவுதல் மாதா தேவாலயத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் சேவியர் ஆண்ட்ரூ நடத்தி வைத்தார். திருவருகைக் காலஆன்மீகப் பின்னணியும், எதிர்பார்ப்பு, தயாரிப்பு மற்றும் மனத்திரும்புதல் ஆகியவற்றின் ஆழமான. அர்த்தத்தையும் அவர் தெளிவாக எடுத்துரைத்தார்.

காலை பிரார்த்தனையோடு தொடங்கிய இந்த முகாம், விவிலிய வாசிப்பு, தனிப்பட்ட சிந்தனை, குழுவாரியான பகிர்வு மற்றும் நற்கருனை ஆராதனை ஆகியவற்றுடன் செழுமையாக அமைந்தது. பங்கேற்பாளர்கள் திருவருகைக் காலத்தில் வாழ்வை மீளாய்வு செய்து, இறைவனை நோக்கிச் செல்லும் புதிய முடிவுகளை எடுத்துக்கொள்ளும் வண்ணம் அருட்பணியாளர் சேவியர் ஊக்கமளித்தார்.

உண்மை மற்றும் நேசத்தால் நிரம்பி. சொற்பொழிவுகளின் மூலம், திருவருகை என்பது ஆண்டு திருவிழா முன்னேற்பாடு மட்டுமல்ல; மாறாக கிறிஸ்து மனங்களில் பிறக்கும் நேரமென பங்கேற்பாளர்கள் உணர்ந்தனர். ஆழ்ந்த அமைதியும், ஆன்மீகத் தொடுதலும் நிறைந்த இந்த முகாம் அனைவருக்கும் புதுப்பித்தல் அளித்தது.

தமிழ்ப் பிரிவினர் மற்றும் ஏற்பாட்டுக் குழுவினர் இணைந்து சிறப்பாக ஒருங்கிணைத்த இந்தநிகழ்வு, வரவிருக்கும் கிறிஸ்துமஸ் காலத்தை ஆன்மீகமாகக் கொண்டாடுவதற்கான சிறந்த துவக்கமாக அமைந்தது.

# திருவருகை முதல் கிறிஸ்மஸ் Octave வரை – ஒரு ஆன்மீக பிரதிபலிப்பு






திருவருகை காலம் என்பது ஒரு திருவிழாவுக்கான வெளிப்புறத் தயாரிப்பு மட்டுமன்று; என் மனமும் என் ஆன்மாவும் கிறிஸ்துவின் வருகைக்குத் தயார் ஆவதற்கான புனிதப் பயணம். இந்த காலம் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. முதல் பகுதி நவம்பர் 30 முதல் டிசம்பர் 17 வரை நடைபெறுகிறது. இது என் உள்ளத்தை விழிப்புணர்விற்கு அழைத்து, தேவனை நோக்கி திரும்பும் மனமாற்றத்திற்குத் தயாராக்கும் நேரமாகிறது. இரண்டாம் பகுதி டிசம்பர் 17 முதல் 24 வரை இடம்பெறும் O Antiphon நாட்களாகும். இந்த நாட்கள் இரட்சகரின் வருகை நெருங்கிவிட்டது என்பதை நினைவூட்டும் விசேஷ அழைப்புகளாக உள்ளன. தேவனின் வாக்குறுதிகள் நிறைவேறும் நம்பிக்கைப் பாதையில் ஆழமாக நடந்து செல்ல எனக்கு உதவுகின்றன.

திருவருகை காலத்தின் மையப்பொருள் — பரிசுத்த சிந்தனை, மனமாற்றம், எதிர்பார்ப்பு. நான் செய்த பிழைகளையும் மனச்சுமைகளையும் ஒப்புரவின் மூலம் ஆண்டவரிடம் ஒப்படைத்து, பாவமன்னிப்பின் அமைதியை அனுபவிக்க வேண்டிய நேரம் இது. ஏசாயா 9:2 இல், "இருளில் நடக்கும் ஜனங்கள் பெரிய ஒளியை கண்டனர்" என்று கூறப்படுவது போல, கிறிஸ்துவின் வருகை என் வாழ்க்கையின் இருண்ட பகுதிகளிலும் நம்பிக்கையின் ஒளியை ஏற்றுகிறது.

கிறிஸ்துவின் பிறப்பு திருநாளில் திருச்சபை நமக்கு நான்கு முக்கியமான திருப்பலிகளை வழங்குகிறது:

24 ஆம் தேதி மாலை நடைபெறும் Vigil Mass, இரட்சகரை எதிர்பார்த்து விழித்திருக்கும் நம்பிக்கையின் இரவு. பின்னர் நடைபெறும் Midnight Mass, இயேசுவின் பிறப்பு நிகழ்ந்த புனித நொடியை கொண்டாடும் திருப்பலி. 25 ஆம் தேதி அதிகாலை நடைபெறும் Mass at Dawn, மேய்ப்பர்கள் கண்ட ஒளியைப் போல என் இதயத்தில் கிறிஸ்துவின் ஒளி எழுவதைக் குறிக்கும். அதே நாளில் நடைபெறும் Mass During the Day, "வார்த்தை மறுஉருவானார்" என்ற இரட்சிப்பின் ஆழ்ந்த இரகசியத்தை வெளிப்படுத்துகிறது. இந்த நான்கு திருப்பலிகளும் கிறிஸ்துவின் பிறப்பை என் உள்ளத்தில் உண்மையாகப் பிறக்கச் செய்யும் புனித அனுபவங்களின் உச்சமாக நிற்கின்றன.

கிறிஸ்துமஸ் தினம் ஒரே நாளில் முடிவதில்லை. திருச்சபை டிசம்பர் 25 முதல் ஜனவரி 1 வரை கிறிஸ்துமஸ் Octave என்ற எட்டு நாள் புனித காலத்தில் கிறிஸ்துவின் பிறப்பின் மகிமையை தொடர்ந்து அறிவிக்கிறது. டிசம்பர் 26-ல் புனித ஸ்தேவானார்—தியாகத்தின் சாட்சி; 27-ல் புனித யோவான்—அன்பின் சாட்சி; 28-ல் புனித குழந்தைகள்—மாசற்றவர்களின் துன்பத்தின் சாட்சி; மேலும் புனித குடும்ப ஞாயிறு நம் குடும்பங்களை தேவனின் அமைதியில் கட்டியமைக்க அழைக்கிறது. ஜனவரி 1 அன்று 'இறைவனின் தாய் மரியாள்' திருவிழாவுடன் Octave நிறைவு பெறுகிறது. மரியாளின் "ஆம்" என்ற ஒத்துழைப்பின் மூலம் இரட்சிப்பு வரலாறு நம் வாழ்வில் நுழைந்ததை இது நினைவூட்டுகிறது.

திருவருகை காலமும் கிறிஸ்துமஸ் Octave-மும் ஒருசேர எனக்கு ஒரு முக்கியமான உண்மையைச் சொல்லுகின்றன: கிறிஸ்துவின் வருகை ஒரு நாள் நிகழ்வு அல்ல; அது என் இதயத்தை மாற்றும் தொடர்ச்சியான அழைப்பு. விழிப்புணர்வில் வாழவும், மனந்திரும்பவும், நம்பிக்கையில் நிலைத்து நிற்கவும், தேவன் எப்போதும் என்னோடு இருக்கிறார் என்பதை உணர்ந்திடவும் இந்த புனித காலம் என்னை வழிநடத்துகிறது.

- Masilamalar Masilamany

# திருவருகைக் காலம் 4ஆம் ஞாயிறு (21.12.2025)

**எசா 7:10-14, உரோ 1:1-7, மத் 1:18-24**

திருஅவை திருவருகைக் காலத்தின் 4ஆம் ஞாயிறைக் கொண்டாடுகிறது.

இன்றைய முதல் வாசகத்தில் "உங்கள் நம்பிக்கையில் நிலைத்திராவிடில் நீங்களும் நிலைத்து நிற்கமாட்டீர்கள்" என 9ஆம் வசனத்தில் வாசிக்கிறோம். இவ்வாறு அரசர்கள்மேல் நம்பிக்கை கொள்வதைவிட ஆண்டவர் மேல் நம்பிக்கை கொள்ளுங்கள் என எச்சரித்து விவரிக்கிறது முதல் வாசகம்.

இதன்வழி கடவுள் நம்மோடு இருக்கிறார் எனும் நம்பிக்கையின் அடையாளமாக அறியப்படுகிறது.

நற்செய்தியில் நாம் யோசேப்பைப் பற்றி காண்போம்.

- யோசேப்பு ஒரு நேர்மையாளர்.
- எத்தீங்கும் யாருக்கும் நினைக்காதவர்.
- இறைவனுக்கு அஞ்சுபவர்.

எனினும் மன ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள நிலையில் மரியாள் கருத்தாங்கியிருப்பதை அறிந்து விளக்கிவிட எண்ணுகிறார்.

இச்சமயத்தில்தான் ஆண்டவரின் தூதர் அவருக்கு கனவில் தோன்றி, யோசேப்பின் அதிர்ச்சி, கலக்கம், மனக்குழப்பம் ஒன்றுசேர செய்வதறியாது நின்ற அவருக்கு ஆண்டவர் நம்பிக்கை தருகிறார்.

தூய ஆவியின் ஆற்றலால் கருத்தாங்கியிருக்கிறார் என உணர்ந்து மரியாவை ஏற்றுக் கொள்கிறார் யோசேப்பு.

இதன்வழி யோசேப்பு வானதூதர் வழியாக இறை திட்டத்திற்கு கீழ்படிகிறார் என்பது நிரூபனமாகிறது.

இந்த மறைபொருள் பிறக்கபோகும் குழந்தையின் தனித்தன்மையை மட்டுமல்ல, அவருடைய பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு எனும் உயரிய நோக்கத்தையும் வெளிப்படுத்துகிறது. அதுமாத்திரமல்ல அவருடைய பணி வாழ்விலும் இதை தெளிவாக காணமுடிகிறது.

எனவே, திருவருகைக் காலத்தின் கடைசி வாரமாகிய இத்தயாரிப்பு வாரத்தில் நாம் ஒட்டு மொத்தமாக விழிப்புணர்வு, தாழ்ச்சியோடு இறைவனை எதிர்பார்த்தல், ஏழை எளியோருக்கு உதவுவதல், கொடுத்தல் என நம்மை தயார் படுத்தும் போது நம் மத்தியில் கடவுள் பிரசன்னமாவதை உணர முடியும்.

சுருக்கமாக, இன்றைய நற்செய்தி நமக்கு ஆண்டவர் தாம் அன்பு செய்யும் மக்கள் நடுவில் என்றும் இருக்கிறார் என்பதை கலக்கமுறும் மக்களுக்கு உறுதியாக கூறுகிறார்.

மனைவி மீது சந்தேகம், கணவன் மீது சந்தேகம், பிள்ளைகள் மீது சந்தேகம் ஆகியவைகள் நமக்கு பல குளறுபடிகளையும், வேதனைகளையும், தீராத வடுகளையும், பிரிவினைகளையும் நமக்கு தருகின்றன. இதனை நீக்குவோம், கடவுள் என்றும் நம்மோடு வாழ்கிறார் எனும் வாக்குக்கேற்ப கிறிஸ்து பிறந்தநாளை கொண்டாடுவோம். அகமகிழ்வோம். சீடத்துவத்தை ஆழப்படுத்துவோம்.

ஆ.வி.டேவிட்.

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.